

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.1.2025) தலைமைச் செயலகத்தில், மதுரை மாவட்டம், அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்திட்டம் இரத்து செய்யப்பட காரணமாக இருந்தமைக்காக, மதுரை மாவட்டம் – அரிட்டாபட்டி, வள்ளலார் பட்டி, கிடாரிப்பட்டி, நரசிங்கம் பட்டி, நாயக்கர்பட்டி, செட்டியார் பட்டி, தெற்கு தெரு, மீனாட்சிபுரம், மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர். உடன் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.1.2025) தலைமைச் செயலகத்தில், மதுரை மாவட்டம், அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்திட்டம் இரத்து செய்யப்பட காரணமாக இருந்தமைக்காக, மதுரை மாவட்டம் – அரிட்டாபட்டி, வள்ளலார் பட்டி, கிடாரிப்பட்டி, நரசிங்கம் பட்டி, நாயக்கர்பட்டி, செட்டியார் பட்டி, தெற்கு தெரு, மீனாட்சிபுரம், மாங்குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர். உடன் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி உள்ளார்.

## இரும்பின் காலம் குறித்த பிரகடனம்!

# முதல்வருக்கு நல் வணக்கம்!



இரும்பின் தொழில்நுட்பம்
5300 ஆண்டுகட்கு முன்பே
தமிழ்மண்ணில்
புழக்கத்திற்கு வந்துவிட்டது
என்ற பிரகடனத்தை
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
வெளியிட்டபோது
அவர் குரலிலும் முகத்திலும்
தொனித்தது
ஒட்டுமொத்தத் தமிழினத்தின்
பெருமிதம் அல்லவா?

உலக ஆய்வகங்களின்
கதிரியக்கப்
பகுப்பாய்வுக்குப் பிறகு
இந்தத் தொன்மை



உண்மையென்று
உணர்த்தப்பெற்றுள்ளது

தீ இரும்பு சக்கரம் என்ற
கண்டுபிடிப்புகளே
மனிதகுல வரலாற்றை
வளைத்துத் திருப்பியவை

இதில் இரும்பின் இடம்
உறுதியானது

திருவள்ளுவர் இரும்பைப்
பொன் என்று சுட்டுகிறார்

"தூண்டில் பொன்
மீன்விழுங்கி யற்று" என்கிறார்

இந்தப் பெருமை
இந்திய நாகரிகத்துக்குத்
தமிழர் முன்னோடி என்பதை
உறுதிசெய்யும்

முதலமைச்சருக்கும்
இதன் பின்புலத்திலிருந்த
அறிவுப்புலத்தார்க்கும்
நல்வணக்கம் செலுத்தி
நன்றிசொல்கிறேன்



கவிப்பேரரசு
**வைரமுத்து**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2025) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து – நடராசன் ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2025) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து – நடராசன் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## நாளை நடைபெறுகிறது

# 'யு.ஜி.சி. வரைவு விதிமுறைகள் 2025' கருத்தரங்கம் !

## ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அசோக்வர்தன் ஷெட்டி சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, ஜன. 26-

IDRM எனும் 'இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம்' சார்பில், தேசிய அளவிலான 'பல்கலைக்கழக மானியக்குழு (.ஜி.சி.) வரைவு விதிமுறைகள் 2025' என்ற தலைப்பில் கருத்தரங்கம், நாளை (27.1.2025 - திங்கள்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ராயப்பேட்டையில் உள்ள இந்திய ஆட்சிப் பணி அமைப்பு (IAS OFFICERS ASSOCIATION) வளாகம் திருவள்ளுவர் கூடத்தில் நடைபெறுகிறது.

இந்த முக்கியமான கருத்தரங்கிற்கு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஞான இராஜசேகரன் தலைமை வகிக்கிறார்.

பொருளாதார நிபுணர் டாக்டர் வெங்கடேஷ் ஆத்ரேயா அவர்கள், கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கி உரையாற்றுகிறார்.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், சென்னையில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழக முன்னாள்துணைவேந்தருமான கே.அசோக் வர்தன் ஷெட்டி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகிறார்.

பேராசிரியர் ஏ.கருணானந்தம் (சென்னை விவேகானந்தா கல்லூரியின் தலைவர்) நிறைவுரையாற்றுகிறார்.

பேராசிரியர்கள் ஜெ.காந்திராஜ், எஸ். எச்.திலகர் மற்றும் மருதையன் (தமிழ் நாட்டின் குரல்) ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் வாழ்த்துரை வழங்குவார்கள்.

பி.பாலமுருகன் நன்றி உரை ஆற்றுகிறார்.

முன்னதாக, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களிடம் உதவியாளராகப் பணிபுரிந்த டாக்டர் கே.பொன்ராஜ் வரவேற்றுப் பேசுகிறார்.

இந்திரகுமார் தேரடி, இக்கருத்தரங்கின் நெறியாளராக இருந்து, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார்.